சென்னை, மயிலை தொகுதியில் நொச்சிக்குப்பத்தில் இருந்து முள்ளிக்குப்பம் வரையுள்ள சாலையினை கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான மதிற் சுவர் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலாளர்): ஆம்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிற் சுவர் எவ்வளவு தூரம் கட்டப்படும்? இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது? திருச்செந்தூர் மணப்பாடு புன்னக்காயல் ஆகிய ஊர்களில் கடல் அரிப்பு தொடர்ந்து ஏற்படுவதால் அந்தப்பகுதியிலும் தடுப்பு சுவர் கட்ட அரசு முன்வருமா.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, தென் சென்னையில் பட்டினப் பாக்கத்திலிருந்து புதிய கலங்கரை விளக்கம் வரை, மாற்று சாலையில் 300 மற்றும் 200 மீட்டர்கள் நீளத்திற்கு தனித் தனியாக கடலரிக்கப்பட்ட இடங்களில், கடலரிப்பைத் தடுக்க தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு. தலைமைப்பொறியாளர் (கட்டிடம்) ரூ. 10.30 இலட்சங் களுக்கான மதிப்பீட்டை அளித்துள்ளார். மேற்கூறிய செயற்குறிப்பு நிதித்துறையின் பரிசீலனையில் உள்ளது. திருச் செந்தூரில் புன்னக்காயல் ஊரில் கடல் அரிப்பைத் தடுக்க பாதுகாப்பு செய்யப்படுமா என்று கேட்கிறார் மாண்புமிகு உறுப்பினர். தேவையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டுவது பற்றி நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் குறிப்பிட்டார். ஆனால், சாலைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருப்பதைச் சீர் செய்ய, அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, ரூ. 1.05 இலட்சத்திற்கு, தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) இது தொடர்பாக சாலை, நடைபாதை ஆகியவற்றை இச்சாலைப் பகுதியில் செப்பனிட செயற்குறிப்பு ஒன்று அளித்துள்ளார்.

திருச்சி நகரத்தில் வெள்ளத்தால் சேதம்.

*வினா எண். 541—திரு கே. சௌந்திரராசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

1979 மார்ச் 26]

(அ) திருச்சி நகரத்தில் வெள்ளத்தால் வீடிழந்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) எவ்வளவு பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ): 1977-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் திருச்சிராப்பள்ளி நகரில் 8,854 குடும்பங்கள் வீடிழந்தன. 8,643 குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை கொடுக்கப்பட்டது.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சி காவிரி நதியினுடைய பக்கத்திலே அமைந்திருக்கிற காரணத்தால், அங்கு அடிக்கடி வெள்ளம் வருவதாலும், அதனால் அங்கு ஓரப் பகுதியில் இருப்பவர்கள் குடிசைகளை இழப்பது என்பது தொடர்ந்து நடைபெறுகிற நிலைமையாக இருக்கிறது. ஆகவே, அப்படி தாழ்வான பகுதிகளிலிருப்பவர்களை, பக்கத்திலே மேட்டுப் பாங்கான பகுதிகளிலும் குடியமர்த்துவதற்கும், அதன் மூலம் வெள்ளம் வரும்போது அவர்களுக்குத் தொல்லை ஏற்படாமலிருக்க இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படிப்பட்டவர்களெல்லாம் தாழ்வான பகுதிகளில் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்காக வேறு நிலம் பார்த்துக் கொடுக்கவும் அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அப்பொழுது வெள்ளம் வந்த நேரத்திலே கூறப்பட்டு அத்திட்டம் செயல்பட இருந்தது. ஆனால், அந்தச் செயல் திட்டம் இப்பொழுது எந்த அளவில் இருக்கிறது என்பது தெரியவில்லை. இருந்தாலும் இரண்டு ஆண்டுகளாகியும் அந்த பகுதியிலிருப்பவர்கள் இன்னமும் வீடில்லாமல் தவிக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்குள் வீடற்ற நிலைமையைச் சீர்திருத்தி, அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்கிருக்கிற தகவல். அதுபற்றி மேலும் விவரம் வேண்டுமானால் சம்பந்தப்பட்ட இலாகாவை கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.